**ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம்: 03/2015 (திருத்தம் II)**

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2016
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
09 -09-2016.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்/ முப்படைத் தளபதிகள்,
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்,

**ஓய்வு பெறும் திகதியிலேயே ஓய்வூதிய நலன்களைப் பெற்றுக் கொடுத்தல்.**
**(ஓய்வூதிய விண்ணப்பங்களை இணையவழி (Online) மூலம் அனுப்புதல்).**

மேற்குறித்த விடயம் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்டுள்ள 24-04-2015 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம் 03/2015 மற்றும் 01-10-2015 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருப இலக்கம் 03/2015 (திருத்தம் I) என்பவற்றின் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானது.

ஓய்வூதியப் பதிவு செய்தற் செயற்பாட்டினை இணையவழி (Online) மூலம் மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இச் சேவைகளின் பொருட்டுத் திணைக்கள இணையத் தளமான **www.pensions.gov.lk** இன் PMS (Pensions Management System) எனும் விசேட தொடுகை மூலம் (link) இணைந்து கொள்ள முடியும்.

**<u>இணையச் சேவைகளின் பொருட்டு உள்நுழைதல்.</u>**

இச் சேவையினை முதற் தடவை பெற்றுக் கொள்ளுகையில் குறித்த அரச நிறுவனம் மற்றும் பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் பதிவு செய்யப்பட வேண்டியதுடன், அதன் பின்னர் பெற்றுத் தரப்படும் காப்புப் பதங்களை (Password) உபயோகித்த வண்ணம் தொகுதியினுள் உள்நுழைய முடியும். இம் மென்பொருள், தற்சமயம் விதவைகள் அனாதைகள் பதிவுச் செயற்பாட்டின் போது பயன்படுத்தப்படும் மென்பொருளின் மேம்படுத்தப்பட்டதோர் சேவை ஆவதுடன், **தற்போது அதில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச நிறுவனங்கள் மீளவும் பதிவாதல் தேவையற்றது.**

**<u>இதன் மூலம் கிடைக்கப் பெறும் சேவைகள்.</u>**

1. அரச உத்தியோகத்தரை ஓய்வு பெறச் செய்யும் சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதிய விண்ணப்பத்தினை (PD03) இணையவழி (Online) மூலம் அனுப்ப முடிதல்.
2. தன்னியக்கமாகவே ஓய்வூதிய இலக்கம் வழங்கப்படல்.
3. கொடைப்பத்திரத்தின் மாதிரியினை **(திறைசேரி 79)** அச்சிட்டுக் கொள்ளும் வசதி **(இது நிறுவனத் தலைவரினால் ஒப்பமிடப்பட்ட பின்னர் செல்லுபடியாகும்).**
4. ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டின் குறித்த படிமுறைகளின் போது அது தொடர்பில் குறுஞ் செய்திகள் மூலம் (SMS) ஓய்வூதியரை அறிவூட்டுதல்.

மேற்குறித்த சேவைகளின் பொருட்டு உள்நுழைதல் தொடர்பிலான பூரண அறிவுறுத்தல்கள் இணைப்பு I என இச் சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக **www.sathkara.pensions.gov.lk/guidelines** எனும் இணையத் தொடுகை (Web link) மூலம் மேற்குறித்த மென்பொருளினை உபயோகிக்கும் விதத்தினைக் காணொளி (Video) மூலமும் பார்ப்பதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**நடைமுறைப்படுத்தப்படல்.**

**இச் சேவை 10-10-2016 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அன்று முதல் பழைய செயல்முறையின் கீழ் அனுப்பப்படுகின்ற ஓய்வூதிய விண்ணப்பங்கள் (PD 03) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (10-10-2016 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பில் இம் முறையினை ஏற்புடையதாக்கிக் கொள்ளுதல் கூடாது.)**

பொதுச் சேவையின் வினைத்திறன் மற்றும் தரத்தினை உயர்த்தும் பொருட்டுத் தகவல் தொழினுட்ப உபயோகத்தினை மேம்படுத்த ஓய்வூதியத் திணைக்களத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை வெற்றி கொள்வதற்குத் தங்களது ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

இச் சுற்றுநிருபம் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுச் செயலாளரது இணக்கப்பாட்டின் கீழ் வெளியிடப்படுகின்றது.

**ஒப்பம் / ஏ. ஜகத் டி. டயஸ்,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்

| | |
|---|---|
| 01. சனாதிபதி செயலாளர் | - தயவுமிகு தகவலுக்காக |
| 02. பிரதமரின் செயலாளர் | - தயவுமிகு தகவலுக்காக |
| 03. அமைச்சரவையின் செயலாளர் | - தயவுமிகு தகவலுக்காக |
| 04. செயலாளர், பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு. | - தயவுமிகு தகவலுக்காக |
| 05. கணக்காய்வாளர் நாயகம். | - தயவுமிகு தகவலுக்காக |